தினமணி
www.dinamani.com

# வன மரபியல் நிறுவனத்தில் உலக சுற்றுச்சூழல் தின விழா

கோவை, ஜூன் 5: கோவையில் உள்ள வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் உலக சுற்றுச்சூழல் தின விழா இணைய வழியில் சனிக்கிழமை நடைபெற்றது.

நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் சி.எஸ். வாரியர் பேசும்போது, வரும் 2030க்குள் 350 மில்லியன் ஹெக்டேர் சீரழிந்த நிலப்பரப்பு, நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதன் மூலம் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளில் 9 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை (65.16 லட்சம் கோடி) ஈட்ட முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை மீட்டெடுப்பதன் மூலம் 13 முதல் 26 ஜிகாடான் பசுமைவெளி வாயுக்கள் வளிமண்டலத்திலிருந்து அகற்றப்படலாம் என்றார்.

இதைத் தொடர்ந்து வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குநர் சி.குன்னி கண்ணன் பேசும்போது, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு காலத்தின் கட்டாயம். சுற்றுச்சூழல் மறுசீரமைப்பில், அரிப்புக் கட்டுப்பாடு, மறுகாடழிப்பு, பூர்வீகமற்ற இனங்கள், களைகளை அகற்றுதல், அத்துடன் இலக்கு வைக்கப்பட்ட உயிரினங்களுக்கான வாழ்விடம், வரம்பு மேம்பாடு ஆகியவை அடங்கும் என்றார்.

மேலும், இந்திய வன ஆராய்ச்சி, கல்விக் கழகம் இந்தியாவில் 13 முக்கிய நதிகளை புத்துயிர் பெறச்செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிப்பது குறித்தும் அவர் விளக்கினார்.

சுற்றுச்சூழல் தினத்தையொட்டி மாணவர்கள், பொது மக்களுக்கு ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் அறிவிக்கப்பட்டு, இ-சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

32. News in Dinamani, Coimbatore, 06.06.2021, Digital Observance of World Environment Day by IFGTB ENVIS.